1986 ஏப்ரல் 28]

அது வெளி மாவட்டங்களாக இருந்தாலும் வாங்கிக் கொள்ளலாம். அதற்கு எந்தத் தடையுமில்லை. இந்த நடைமுறை நல்ல முறையில் செயல்படுவதினால் இதில் எந்த மாறுதலும் தேவை யில்லை என்று அரசு கருதுகிறது.

கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள்.

589—(*வினா எண். 7866)—திரு. வி. பாலகிருஷ்ணன் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சிவகாசித் தொகுதி, திருவில்லிப்புத்தூர் ஒன்றியத்தில் உள்ள கீழராஜகுலராமன் கிராமத்தில் ஆதி திராவிடர்களுக்கு R.L.E.G.P. திட்டத்தின் கீழ் வீடுகள் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

பார்த்தீனிய செடிகளை அழித்தல்

590—(*வினா எண். 5613)—திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் பார்த்தீனிய விஷச் செடியை அழிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : நம் மாநிலத்தில் பல்வேறு மாவட்டங்களில் காணப்பட்ட பார்த்தீனியக் களைகள் மீது உப்பு மற்றும் சோப்புக்கரைசலை சூரிய வெளிச்சத்தில் தெளித்ததில் பார்த்தீனியம் களைச் செடிகள் கருகிவிட்டன. 3 அல்லது 4 நாட்களில் வேருடன் காய்ந்து சருகுபோல் ஆகி விடுகின்றன.

பார்த்தீனிய செடி ஒழிப்பு முறைகள் வேளாண்மைத் துறை பணியாளர்கள் மூலம் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்த்தீனியச் செடிகள் அழிக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆனால் தமிழகத்தில் பெரும் பகுதிகளில் இந்தப் பார்த்தீனியச் செடிகள் மிகப் பெரிய அளவில் விளைபொருளைப் போல வளர்ந்து கொண்டிருக்கிறது. அதை நடைமுறையில் ஒழிப்பதற்கு தற்போது எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை என்று நடைமுறை அனுபவம் கூறுகிறது. ஆனால்